வடக்கு மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல: 25/ 2026

எனது இல: **NP/07/10/04/99**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
25.08.2026

அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்,

**வடக்குமாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தரம் I அலுவலர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2024 (2026)**

2016.01.12ம் திகதி கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்டு 2013.06.01ம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் I ஆம் தரத்திலிருந்து விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை இலங்கை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் **2026, ஒக்ரோபர்** மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

விண்ணப்பப் படிவமானது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் "Our Services" இன் கீழேயுள்ள "Online Applications- Recruitment Exam/ E.B Exams" ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் நிகழ்நிலை (Online) ஊடாக மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். **2026.08.25ம் திகதி மு.ப 9.00 மணி முதல் 2026.09.04ம் திகதி பி.ப 9.00 மணி வரை** நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் ஒருங்கிசைவுடன், அவர்களின் அறிவுறுத்தலுக்கமைய விண்ணப்பப்படிவத்தினை நிகழ்நிலையில் சமர்ப்பித்ததன் பின்னர் அதனைத் தரவிறக்கம் செய்து, அதனை அச்சுப்பிரதி (Print) எடுத்து பரீட்சார்த்தி தமது சொந்தக் கையெழுத்தில் பொருத்தமான பிரிவுகளை பூரணப்படுத்தி கையொப்பமிட்டு தனக்குரிய திணைக்களத் தலைவரின் மூலம் அத்தாட்சிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இவ் ஆவணத்தை அலுவலர்கள் தமது திணைக்களத் தலைவரூடாக ***"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், 393/48, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"*** எனும் முகவரிக்கு ***2026.09.04ம்*** திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை எழுதுதல் வேண்டும். விண்ணப்பபடிவங்களை அனுப்புவதை இறுதித் திகதி வரை தாமதப்படுதுவதினால் ஏற்படும் எந்தவொரு பாதாகமான நிலைமைகளையும் விண்ணப்பதாரரே பொறுபேற்றல் வேண்டும்.

2. **இப் பரீட்சைக்கு 2024.12.31 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் இச் சுற்றறிக்கையின் பொருட்டான பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகைமையுடையவராவர்.**

(i) வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுதியின் I ஆம் தரத்தில் ஆகக்குறைந்தது **ஐந்து (05)** வருட முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்து உரிய சம்பள ஏற்றங்கள் **ஐந்து (05)** இனைப் பெற்றுக்கொண்டுள்ள,

மற்றும்

(ii) தரமுயர்வுத் தினத்திற்கு உடன் முன்னரான **ஐந்து(05)** வருடத்தினுள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியுள்ள,

மற்றும்

(iii) அரசசேவை ஆணைக்குழுவின் 1/2020ம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக எந்தவொரு ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்படாதவராக இருத்தல் வேண்டும்.

மற்றும்

(iv) 3ம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்தியுள்ள அலுவலர்கள்.

3. சம்பளம் வழங்குதல் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் பிரகாரம் இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் (MN-7-2026 இன் 4 ஆம் படிநிலை) ரூபா **75,320 – 8 x 1,360 – 18 x 1,850 – 119,500** என்பதுடன், அச்சம்பளம் 2027.01.01ம் திகதி முதலே உரித்தாகும். அதுவரை மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை III இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

4. வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தரம் I இல் இருந்து விசேட தரத்திற்கான தரமுயர்வு பின்வரும் வகையில் மேற்கொள்ளப்படும்:

(i) இணைத்துக் கொள்ளப்படும் சதவீதங்கள் :

மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் **40%**

சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் **60%**

(ii) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 04 ஆகக் காணப்படுமிடத்து மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படுவது 25% (சதவீதம்) ஆகவும், சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையிலே இணைத்துக்கொள்ளப்படும் சதவீதம் 75% ஆக இருக்க வேண்டியிருப்பதோடு, அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 03 ஆக இருக்கும் போது மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நிரப்பப்படும் வெற்றிடங்களின் சதவீதம் 33.33% மற்றும் சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் சதவீதம் 66.66% ஆகவும் இருக்க வேண்டும் .

(iii) வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் விசேட தரத்திற்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை **04** ஐ விட அதிகமாக இருப்பின் மேற்படி **4.(i)** பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும்.

(iv) வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் சித்தியடைபவர்கள் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய தேவைகளையும் பூரணப்படுத்தியிருக்குமிடத்து **வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால்** நியமிக்கப்படும் தேர்வுக் குழுவினால் தகைமைகள் பரீட்சிக்கப்படும் தேர்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பரீட்சையின் திறமைகளின் ஒழுங்கில் மற்றும் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரீட்சை நடைபெற்ற தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் விசேட தரத்திற்கான பதவி உயர்வு **வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால்** வழங்கப்படும்.

(v) இப்பரீட்சையின் பெறுபேறுகள், **2024.12.31ம்** திகதியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்புடையதாக் தகைமைகளைப் பூர்த்தி செய்த அலுவலர்களிடையே பெற்ற புள்ளிகளின் திறமை ஒழுங்குப்படி தெரிவு செய்யப்பட்டு, பரீட்சை நடாத்தப்பட்ட திகதியில் விசேடதர பதவியேற்றத்திற்காக கவனத்திற் கொள்ளப்டும்.

(vi) விசேடதர பதவிக்கு தரமுயர்த்துவதற்கான இவ் மட்டுப்படுத்திய போட்டிப்பரீட்சைப் பெறுபேறுகள் 2024ம் ஆண்டில் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு மட்டுமேயாகும்.

(vii) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் விசேடதரத்தில் 2024.01.01ம் திகதி முதல் 2024.12.31ம் திகதி வரையான ஒவ்வோர் திணைக்களத்திலும் மற்றும் அமைச்சிலும் அந்தந்த பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் அடிப்படையில் நிரப்பப்படும்.

5. ***விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்:***

(i) பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியடையக் கூடிய வகையில் தமது ஆளடையாளத்தை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) தேசிய ஆளடையாள அட்டை

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

(ii) அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமான வகையில், முகத்தினை மறைக்காது மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்தக்கூடியவாறு இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் கண்டு கொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

### 6. *விண்ணப்பிக்கும் முறை :*

(i) நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பபடிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரரின் மூலம் நிகழ்நிலையினூடாக சமர்ப்பிக்கப்படும் செல்லுபடியாகும் விண்ணப்பபடிவம் என திணைக்களத்தினால் பொறுபேற்றகப்பட்டுள்ளதென / பொறுபேற்கப்படவில்லையென முறைமைக்குள் உட்செல்வதற்கு பயன்படுத்தும் கைத்தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail ) விலாசத்திற்கு அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்காக விண்ணப்பம் செய்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள வழிகாட்டல்களை (Instructions) தரவிறக்கம் செய்தல் வேண்டும். விண்ணப்பங்களை பூர்த்தி செய்கையில் அவ்வறிவுறுத்தல்களை கட்டாயமாக பின்பற்றுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் நகல் பிரதியொன்றை பெற்றுக்கொண்ட பின்பு அதில் செய்யப்படும் எவ்வித திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக கருதப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தலேதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்தின் போது, நிகழ்நிலை முறைமையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனக்கருதி எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ii) பரீட்சார்த்திகள் தமது விண்ணபத்தில் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். இப்பரீட்சைக்காக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து அம் மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளித்தல் வேண்டும்.

(iii) இப் பரீட்சைக்கான கட்டணமாக, ரூபா. 600.00 தொகையைப் பரீட்சைக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும். கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை அமைப்பினூடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளின் மூலம் மாத்திரமே கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

1. ஏதேனும் வங்கிக் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)
2. இணைய வழிக் கொடுப்பனவு வசதியுள்ள ஏதேனும் வங்கிப் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the facility of Internet Transactions)
3. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறையினூடாக / Flex இணைப்பினூடாக (Online Banking Method / Flex App of Bank of Ceylon)
4. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளை ஒன்றின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)
5. *தபால் திணைக்களத்தினது எந்தவொரு தபால் காரியாலயத்தின் மூலமும்* ( Any Post Office of the Postal Department)

குறிப்பு:-

(அ) மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் கொடுப்பனவு செய்யும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதாக குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக்கான மொத்தப் பணத்தையும் செலுத்த வேண்டுமென்பதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாக அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக்கட்டணம் செலுத்தும்போது ஏற்படுகின்ற தவறுதல்கள் தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்கமாட்டாது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணத்தை எக்காரணத்திற்காகவும் மீளச் செலுத்தவோ வேறு பரீட்சையொன்றிற்காக மாற்றம் செய்யவோ முடியாது.

7. (i) இச்சுற்றறிக்கை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க கணிப்பின்படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் குறித்துரைக்கப்பட்டவாறு குறித்த பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம், உள்வாங்கப்பட்டிருக்கும் அரச சேவை, விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தினை உறுதிப்படுத்தலும், திணைக்களத் தலைவரின் பரிந்துரையும் அத்தாட்சிப்படுத்தலுடனும் திருத்தமாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறே பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படுதலானது அப்பரீட்சார்த்தி சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதாக கருதுதல் கூடாது.

(ii) விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டதன் பின்னர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தள அறிவித்தல் மூலமாகவும், விண்ணப்பதாரருக்குக் குறுஞ்செய்தி மூலமாகவும் அறிவிக்கப்படும். அவ்வாறு அவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதுவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக **“பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு கிளையிடம்”** தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரியப்படுத்துமிடத்து விண்ணப்பதாரி தாங்கள் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றினையும் திருத்தமாகக் குறிப்பிடல் வேணடும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராக இருப்பின் மேலுள்ள விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றினை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தினைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரணை செய்வது மிகவும் பயனள்ளதாக அமையும். அவ்வாறு விசாரணை செய்யும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதாவதொரு தகவலினை உறுதிப்படுத்துவதற்காக தங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பத்தின் பிரதியை, பரீட்சைக் கட்டணம் செலுத்தல் குறித்துரைக்கப்பட்டிருப்பின் அது குறித்த பற்றுச்சீட்டின் பிரதியை அல்லது விண்ணப்பப் படிவத்தினை தபாலில் அனுப்பும்போது பதிவுசெய்த பற்றுச்சீட்டினைத் தயார்படுத்தி தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

(iii) விண்ணப்பப் படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் பரீட்சார்த்தியின் கையொப்பம் திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர், பரீட்சை மண்டபத்தில் தமக்குரிய இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியுள்ளதுடன், பரீட்சை நடைபெறும் தினத்தன்று தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**8.** மேலே **(7) ஆம் பந்தியில்** குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யத்தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

*9.* பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்.-

இப் பரீட்சையின் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

*10.* பரீட்சை நடைமுறைகள்.-

இந்தப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் நடாத்தப்படும். மேலும் விண்ணப்பிக்கும் மொழிமூலம் பின்னர் மாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

(i) I ஆம் தரத்திலுள்ள அலுவலர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| (1) | **உளச்சார்புப் பரீட்சை** | : 1 மணித்தியாலம் | (100 புள்ளிகள்) |
| (2) | **முகாமைத்துவம்** | : 3 மணித்தியாலம் | (100 புள்ளிகள்) |

விண்ணப்பதாரி தகைமை பெறுவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது **40%** புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

**முதலாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் பின்வருமாறு :**

**உளச்சார்புப் பரீட்சை - பாட இலக்கம் *(1).***

தனக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை சாதாரண செயலாற்றுகை மட்டத்தினைத் தாண்டிய செயற்றிறனைக் கொண்டதாக நிறைவேற்றுவதற்காக தேவைப்படும் அறிவு, ஆற்றல் மற்றும் மனோநிலை என்பவற்றினை பெற்றிருக்கின்றனரா என்றும் அவற்றினைப் பிரயோகித்தலின்போது உச்ச திறமையினைக் காட்டுகின்றனரா எனவும் அளவிட்டுப் பார்க்கும் ஒரு பரீட்சிப்பாகும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடை அளிப்பதற்கான அமைப்பினைக் கொண்ட *50* வினாக்களையுடையதாகக் காணப்படுவதுடன் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**இரண்டாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு:**

**முகாமைத்துவம் - பாட இலக்கம் *(2):***

(i) முகாமைத்துவம் பற்றிய கோட்பாடுகள்

(ii) முகாமைத்துவ தொழிற்பாடுகள் :
- திட்டமிடல்
- தீர்மானங்கள் எடுத்தல்
- தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைகள்
- ஒழுங்கமைப்பு
- பதவிநிலைப்படுத்தல்
- செயற்படுத்துதல்
- ஊக்குவிப்புச் செயன்முறை
- தலைமைத்துவம்
- நிர்வாகம்
- நிர்வாகக் கொள்கைச் செயன்முறை

(iii) பங்குபற்றல் முகாமைத்துவம்

(iv) முகாமைத்துவச் சூழல்

(v) விடய ஆய்வு

இது ஒரு கட்டமைப்பு வினாப்பத்திரமாகும். இதில் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

*11.* பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாகவும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். மேற்படி சட்டவிதிகளை மீறின், அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும்

தண்டனைக்கு ஆளாவார். இவ்வறிவித்தலுக்கு உரித்துடைய நிபந்தனைகளுக்கு ஏற்ப யாதேனுமொரு பரீட்சார்த்தி அப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனக் காணுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அல்லது அதற்குப் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்பட முடியும்.

*12.* இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் காணப்படாத யாதேனும் விடயங்கள் இருப்பின் வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாக அமையும்.

13. பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடங்களின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது சம்பந்தமான இறுதித் தீர்மானம் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினாலேயே மேற்கொள்ளப்படும

*14.* இச்சுற்றறிக்கை அறிவித்தலின் தமிழ், சிங்கள மொழி வாசகங்களுக்கிடையில் யாதேனும் இணக்கப்பாடின்மை காணப்படுமாயின் தமிழ் மொழியிலுள்ள வாசகமே மேலோங்கும்.

*15.* இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினைத் தங்கள் அமைச்சின்/ திணைக்களங்களின்/ அலுவலகங்களின் கீழ்க் கடமையாற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

16. மேலும், இத்தகவல்களை வடக்கு மாகாண இணையத்தளமான www.np.gov.lk எனும் முகவரியில் **Exams & Recruitments** ⟶ **Advertisement** ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

***"பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2495ம் இலக்க 2026.06.26 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலை தழுவியதாக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது"***

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

*ஆழ்வாப்பிள்ளை சிறி,*
*செயலாளர்,*
*மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,*
*வடக்கு மாகாணம்.*
*2026.08.25*

*பிரதி -* *01. பிரதம செயலாளர், வடக்கு மாகாணம் - தகவலுக்காக.*
*02. ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாணம்- தகவலுக்காக.*